செ.வெ.எண்:37 நாள்:29.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 22.06.2020 முதல் 26.06.2020 வரை ஜமாபந்தி நடைபெற்றது. கொரோனா தொற்று (PANDEMIC DISEASES) உலகம் முழுவதும் பரவியுள்ள நிலையில் மத்திய அரசானது நாடு முழுவதும் பொது முடக்கத்தை அறிவித்துள்ளதன் அடிப்படையில் தமிழக அரசானது 30-06-2020 வரை பலவேறு தளர்வுகளுடன் மாநிலம் முழுவதும் பொது முடக்கத்தை அறிவித்துள்ளது. அதனடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில், குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 144 தடை உத்தரவு நடைமுறையில் உள்ளது. தற்போதுள்ள நடைமுறையில் கொரோனா தொற்று அதிக பரவல் ஏற்படக்கூடும் என்ற நிலையில் கூட்டம் கூடுவதற்கு தடை இருக்கின்ற காரணத்தினால் ஜமாபந்தி நடைபெறும் போது பொதுமக்கள் வட்ட அலுவலகங்களுக்கு நேரிடையாக வருகை தராமல் தங்களுடைய கோரிக்கை மனுக்களை அந்தந்த பகுதிகளில் செயல்பட்டு வரும் பொது சேவை மைய (E-Sevai Centre) அல்லது இணைய தளம் வழியாக ( On line mode) வருகின்ற 29-06-2020 முதல் 15-07-2020 வரை URL : https://gdp.tn.gov.in/jamabandhi எனும் இணையதள முகவரி வாயிலாக விண்ணப்பித்திடலாம் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ..ப., தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்**